**செய்தி வெளியீடு எண்: 706** **நாள்: 24.11.2012**

**<u>செய்தி வெளியீடு</u>**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 22.11.2012 அன்று தலைமைச் செயலகத்தில், பொது நூலகத் துறையில் பணிபுரியும் 32 நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர்களுக்கு 16 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வாங்கப்பட்ட 32 மடிக்கணினிகளை வழங்கினார்கள்.

பொது நூலகங்களின் சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் குறைந்த செலவில் அதிக வாசகர்களுக்கு சிறந்த வாசிப்பு வசதிகளை வழங்கிட வேண்டும் என்ற நோக்கத்தில் நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர்களுக்கு 16 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மடிக்கணினிகள் வழங்கப்படும் என்று 2012–13ஆம் ஆண்டு பள்ளிக்கல்வித் துறை மானிய கோரிக்கையின் போது அறிவிக்கப்பட்டது.

அதன்படி, 16 மாவட்ட நூலக அலுவலகங்களில் பணியாற்றும் 16 நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர்களுக்கும், நூல் இருப்பு சரிபார்ப்பு பணியினை மேற்கொண்டு வரும் 16 இரண்டாம் நிலை நூலகர்களுக்கும், என மொத்தம் 32 நூல் இருப்பு சரிபார்ப்பு அலுவலர்களுக்கு, தலா 50 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் எல்காட் நிறுவனம் மூலம் வாங்கப்பட்ட 32 மடிக்கணினிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 22.11.2012 அன்று தலைமைச் செயலகத்தில் வழங்கினார்கள்.

இந்த மடிக்கணினிகள் மூலம், நூலகங்களில் பொது மக்களுக்கு நூல் வழங்கும் பணி பாதிப்பு இல்லாமல், நூல் இருப்பு சரிபார்ப்பு பணியினை துல்லியமாகவும், விரைவாகவும் மேற்கொள்ளவும், இழப்பு நூல்களை கணக்கீடு செய்வதற்கும் மிகவும் பயனுள்ளதாக அமையும்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டுகள், இளைஞர் நலன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், பள்ளிக்கல்வித் துறை முதன்மைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

* * * * * * *

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9
நாள்: 24.11.2012